உ

ஓம் சக்தி துணை

*வெளியீடு 1*



# துர்க்கா மஞ்சரி

"அன்புமானவள் துர்க்கா அறிவுமானவள்- இன்பமானவள் துர்க்கா இனிமையானவள்"


மலர்-1 பிரமாதிவருடம் சித்திரை 01 (13-04-99) இதழ்-1



3325 கிங்ஸ்வே, வன்கூவர் ,பிரிட்டிஸ் கொலம்பியா தொலைபேசி. (604) 430-6450
3325 Kingsway, Vancouver,BC V5E 1C9 Phone. (604) 430-6450


அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அம்மையின் அடியார்களே !

உங்கள் அனைவருக்கும் எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த மங்களகரமான பிரமாதி வருட ஆரம்பத்துடன் உங்கள் கைகளில் "துர்க்கா மஞ்சரி" என்ற செய்தி மடலைத் தவழவிடுவதில் துர்க்கா தேவி ஆலயம் மகிழ்ச்சி அடைகிறது. ஆலய வளர்ச்சிக்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் அம்மையின் அடியார்களான உங்களுக்கு, ஆலயத்தின் செயற்பாடுகள் பற்றி - காலத்திற்குக் காலம் ஒரு வெளியீடு மூலம் - அறியத்தருவது அவசியமானது என்பதை உங்களால் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகக் குழு கருத்திற் கொண்டது. இந்தக் கருத்தின் வெளிப்பாடே இந்தச் செய்தி மடல். ஆரம்பத்தில் இம் மலர் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும். தேவை ஏற்படின் வெளியீட்டின் கால இடைவெளி குறைக்கப்படும்.

இது எமது ஆரம்ப முயற்சி என்பதால் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. தவறுகள் ஏதாவது இருப்பின் அவைகளை எமது கவனத்திற்கு கொண்டுவாருங்கள்.

வருங்காலத்தில் பல விபரங்களை உள்ளடக்கி, வெளிவர இருக்கும் "துர்க்கா மஞ்சரி" --க்கு உங்களது ஆக்க பூர்வமான ஆலோசனைகளைத் தெரியப்படுத்துங்கள்.

நன்றி- வணக்கம்

அன்புடன்
மு.கதிர்காமநாதன்.
க.நடராஜா.
(மலர் வெளியீட்டாளர்கள்.)
13-04-99

---

## ஆலய பூசை நேரங்கள்

| | | |
|---|---|---|
| செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் | மதியம் | 12.00 மணி |
| செவ்வாய்க் கிழமை (ராகுகாலப் பூசை) | பி.ப | 2.00 மணி |
| தினந்தோறும் | இரவு | 8.00 மணி |

- பூசைகளைப் பொறுப்பேற்க விரும்பும் அடியார்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- உங்கள் பிள்ளைகளினது பிறந்தநாள் தினத்தன்றோ அல்லது உங்கள் பிறந்தநாள் தினத்தன்றோ பூசைகள் அல்லது அபிடேகத்துடன் கூடிய பூசைகள் செய்வதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- இவைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு ஆலய நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

யோக வணக்கம்

| | | |
|---|---|---|
| செவ்வாய்க்கிழமைகளில் | இரவு | 7.45 முதல் 8.00 மணி வரை |

**சித்திரை, வைகாசி மாதங்களில் வரும் விரத நாட்கள்.**

| | | |
|---|---|---|
| 15.4.99 | வியாழக்கிழமை | அமாவசை விரதம் |
| 17.4.99 | சனிக்கிழமை | கார்த்திகை விரதம் |
| 19.4.99 | திங்கட்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 27.4.99 | செவ்வாய்க்கிழமை | பிரதோச விரதம் |
| 29.4.99 | வியாழக்கிழமை | சித்திரா பூரணை விரதம் |
| 07.5.99 | வெள்ளிக்கிழமை | சிரவண விரதம், நடேசர் அபிடேகம் |
| 09.5 99 | ஞாயிற்றுக்கிழமை | திருநாவுக்கரசு நாயனார் குருபூசை |
| 12.5.99 | புதன் கிழமை | பிரதோச விரதம் |
| 14.5.99 | வெள்ளிக்கிழமை | அமாவசை விரதம் |
| 18.5.99 | செவ்வாய்க்கிழமை | சதுர்த்தி விரதம் |
| 27.5.99 | வியாழக்கிழமை | பிரதோச விரதம் |
| 28.5.99 | வெள்ளிக்கிழமை | வைகாசி விசாகம் |
| 29.5.99 | சனிக்கிழமை | பூரணை விரதம் |

அடியார்களின் கவனத்திற்கு............

- அந்திமக்கிரிகைகள், வருடாந் திவசங்கள் என்பவைகளை அடியார்கள் ஆலயத்தில் செய்வதற்கு வேண்டிய வசதிகள் (சமையல் அறை) ஆலயத்தில் உண்டு.
- இக் கிரிகைகளை அடியார்கள் - பகலிலோ அல்லது இரவிலோ நிறைவேற்றலாம்.
- பகல் பூஜைகள் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்களில் மட்டும் நடைபெற்றாலும் - பகல் பூஜை நடைபெறாத மற்றைய நாட்களிலும் (திங்கள், புதன், வியழன், சனி) அடியார்கள் நிர்வாகத்துடன் முன்கூட்டியே தொடர்பு கொண்டு - தங்கள் தேவைக்கு ஏற்ப பூஜைகளையோஅல்லது அபிடேகத்துடன் கூடிய பூஜைகளையோ ஏற்பாடு செய்யலாம்

---

## *அருள்மிகு துர்காதேவி இந்து தேவஸ்தானம் பிரிட்டிஸ் கொலம்பியா*

### *ஆலய பரிபாலன சபை -1999*

| | | |
|---|---|---|
| தலைவர்: | திரு. க.குமாரசாமி. | 430-2596 |
| உப தலைவர்: | திரு. சோ.சந்திரலோகன். | 324-3201 |
| செயலாளர்: | திரு. ச.ரஞ்ஜிதநாதன். | 526-2652 |
| உப செயலாளர்: | திரு. தா.முருகதாசன். | 321-5795 |
| பொருளாளர்: | திருமதி. இ.தியாகராஜா. | 323-9307 |
| உதவிப் பொருளாளர்: | திருமதி வி.சிவானந்தராஜா. | 324-7335 |

**நிர்வாகசபை அங்கத்தவர்கள்.**

| | |
|---|---|
| திரு.க.பாலசுப்பிரமணியம். | 874-7287 |
| திரு.செ.சுப்பிரமணியம். | 327-7614 |
| திரு.மா.மூர்த்தி. | 520-6356 |
| திரு.க.தவக்குமார். | 872-5013 |
| திரு.ந.ஜெயக்குமார். | 874-9939 |

**ஆலோசகர்கள்.**

| | |
|---|---|
| திரு வி.தியாகராஜா. | 469-1034 |
| திரு.க.நடராஜா. | 321-3722 |
| திரு.த.கேதீஸ்வரநாதன். | 264-9741 |
| திரு.ப.இரட்ணசாமி. | 222-3550 |

**உப-குழு அங்கத்தவர்கள்.**

| | |
|---|---|
| திரு.ந. ஜெயரட்னம். | 327-0710 |
| திரு.பூ.தவக்குமார். | 930-9831 |
| திரு.சி.சாந்தகுமார். | 872-5013 |
| திரு.சு.சிவராஜா. | 830-5214 |
| திரு.ச.சிவகுமாரன். | 272-3412 |
| திரு.மு.கதிர்காமநாதன். | 951-4350 |

---

## ஸ்ரீ துர்க்கை

- இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய மூன்று சக்திகளும் ஒன்று சேர்ந்தவளே ஸ்ரீ துர்க்கை. எனவே. ஸ்ரீ துர்க்கையை வணங்குவதால் காளி, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் துதிப்பதன் பலன் நமக்குக் கிடைக்கிறது.

## ராகுகால துர்க்கை

- மகிஷாசுரன்கடுந்தவம் பல புரிந்து மும்மூர்த்திகளிடம் சக்தி வாய்ந்த வரங்களைப் பெற்று - தனது சகாக்கமுடன் சேர்ந்து தேவர்களைத் துன்புறுத்தி அழித்து வரத் துவங்கினான்.
- இவன் தரும் துன்பங்களைத் தாங்காத தேவர்கள் மும்மூர்த்திகளிடம் முறையிட்டார்கள். மும்மூர்திகள்,மகிஷாசுரனை அழிக்க மூன்று சக்திகளையும் ஒன்று சேர்த்து துர்க்கா தேவியை உருவாக்கினார்கள்.
- அந்த மஹாதுர்க்கையே, ராகு காலத்தில் மகிஷாசுரனையும் அவனது சகாக்களையும் அழித்து தேவர்களைக் காப்பாற்றினாள்.
- ராகு காலத்தில் துர்கையின் சக்தி அளப்பரியது. நாமும் ராகு காலத்தில் துர்க்கையை வழிபட்டால் நம் கஷ்டங்கள் அனைத்தையும் களைந்து துன்பங்களை நீக்குகிறாள்; நினைத்த காரியத்தை நிறைவேற்றி வைக்கிறாள்.

---

உ
சக்திமயம்

## " *மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்* "

**அம்பிகை அடியார்களே !**

வேண்டாதனைத்தும் நீக்கி, வேண்டுவனவெல்லாம் தந்தருளும் அன்னை பராசத்தியின் அருள் துணையோடு, ஆலயத்தின் தற்போதைய செயற்பாடுகள்,எதிர்காலத்திட்டங்கள் பற்றிய விவரங்களை, 'துர்கா மஞ்சரி' என்ற செய்தி மடலின் முதலாவது வெளியீடு மூலம், உங்களோடு பகிர்ந்துகொள்ள விழைகிறோம்.

நமது ஆன்ம ஈடேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் ஆதாரமாக இருப்பது ஆலயமே. நமது ஆன்மாவைப் பற்றி நிற்கும் ஆணவமலம் அடங்குவதற்குரிய இடமும் ஆலயமே.மனத்-தூய்மையையும், மனவலிமையையும் வளர்த்து ஆன்மபலத்தைக் கொடுப்பதும் ஆலயமே. ஆலயம் என்பது மக்கள் ஒன்று கூடி வழிபாடு செய்யும் இடமாக மட்டுமல்ல, அங்கு நடைபெறும் விழாக்கள், சமூக வாழ்வைப் புனிதப்படுத்தி, நமது கலை, பண்பாடுகளை பேணி வளர்க்கும், ஆன்மீக கருவூலங்களாகவும், கலைக்கூடங்களாகவும் திகழ்கின்றன.

ஆலய வழிபாட்டின் மூலம் ஒரு சமுதாயத்தின் பண்பாடுகள், பாரம்பரியங்கள் வளர்க்கப்படுவதுடன் அவை அழியாமல் மேலும் வளர்வதற்கு வழிவகுக்கப்படுகின்றது. இதனால் தான் நம் மூதாதையர்கள் வாழ்ந்த இடத்தில் எல்லாம் அருள் மழை பொழியும் ஆலயங்களை எழுப்பினார்கள். " கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் " என்றும் கூறி வைத்தார்கள்.

ஊருக்கு ஒரு கோயிலல்ல, பல கோயில்கள் நிறைந்த ஊர்களில் வாழ்ந்த நாம், இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் இயந்திர வாழ்வுமுறையில் உழன்று, பல் கலாச்சாரங்களின் தாக்கங்களுக்கு மத்தியில், எங்கே போகின்றோம் என்பது கூடப்புரியாமல் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஆன்மீகத்தை வளர்க்கும் நம் ஆலயங்கள், நமக்கு கலங்கரை விளக்கங்களாக அமைகின்றன. நமது இளைய தலைமுறைக்கும், அடுத்த பரம்பரைகளுக்கும் நாம் சேர்த்துக் கொடுக்கும் அரிய சொத்தாக அமைகின்றன. நமது இனத்தை, மொழியை, மதத்தை, கலை, கலாச்சாரங்களை அடையாளம் காட்டும் அற்புதச்சின்னங்களாக அமையப்போகின்றன. அத்தகைய சின்னங்களில் ஒன்றாக, அருள்மிகு துர்க்காதேவி ஆலயம் அமைவது உங்கள் கரங்களில் தான் தங்கியுள்ளது.

தமிழ் மக்களுக்கென்று தனியாக ஒரு வழிபாட்டுத்தலம் வன்கூவரில் இல்லையே என்று அங்கலாய்த்த மக்களுக்கு அன்னையின் ஆலயம் ஒரு வரப்பிரசாதமாகும். மக்களின் ஆணையும் ஆதரவும் பெற்று இவ்வாலயம் கடந்த மார்கழி 31ம் நாள் புதிய நிர்வாக சபையால் பொறுப்பேற்கப்பட்டு, மக்கள் ஆலயமாக சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டு, செவ்வனே நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள வாடகை மண்டபத்தில் தொடர்ந்தும் இவ் ஆலயம் இயங்கக்கூடிய சூழ்நிலை இல்லை. என்றைக்காவது நாம் அமைக்கப்போகும் ஆலயத்தை இன்றைக்கே அமைக்க அடிகோலுவோம். ஒற்றுமையோடு ஒன்றாகி, முழுமனதோடு செயற்படுவோம்.

அன்னைக்கு நிரந்தர ஆலயம் அமைக்கும் அறப்பணியில், நாம் அனைவரும் பங்கு கொண்டு, இவ்வாழ்விலும், மறுவாழ்விலும் ஈடேற்றம் பெறவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றோம். அன்னையின் ஆலயத்திற்கான காணியின் பெறுமதியை, அனைவரும் பங்கு கொள்ளும் விதத்தில் ஆயிரம் பங்குகளாக்கி, பங்கு ஒன்று 250 டொலர்கள் ஆக பிரித்துள்ளோம். உங்கள் குடும்பத்தின் பெயரில் இயன்ற அளவு பங்குகளை நீங்கள் முழுமனதோடு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், இத்தெய்வீகத்திருப்பணிக்கு மனமார வாரி, வாரி வழங்கவேண்டும் என்றும், இதை நம் குலதெய்வத்தின் குரலாக ஏற்று, அருட் கடலான அன்னை துர்கையின் அருள் பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். இச் சந்தர்ப்பத்தில் தமிழ் இன உணர்வால் உந்தப்பட்ட - இந்து சமயத்தில் இல்லாத சில அன்பர்கள் - ஆயிரக்கணக்கில் நன்கொடைகளை அன்பளிப்பாகத் தந்துள்ளார்கள் என்றசெய்தியையும் உங்களுக்குத் தெரியப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம். அந்த நல் இதயம் படைத்தவர்கமுக்கு எங்கள் நன்றி களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொன்மையும், தனித்துவமும் கொண்ட செழுமையான தொரு பாரம்பரியத்திற்கு சொந்தக்காரர்கள் நாங்கள்.அன்று மன்னர்கள் செய்த ஆலயத் திருப்பணிகளை, இன்று மக்களாகிய நாங்கள் தொடர்ந்து செய்து எமது தார்மீகக் கடமைகளை நிறைவு செய்வோம். ஆலயம் அமைத்து பரிபாலித்து, திருத்தொண்டு செய்து வாழும் வாழ்வே பயனுள்ள வாழ்வு.
வாழ்வாங்கு வாழும் வாழ்வு.

" வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் "

திருக்குறள்.

அன்புடன் க.நடராஜா.

---

உ
ஓம் சக்தி துணை

## யோக வணக்கத்தின் மூன்று கோணங்கள்

1. அறிவு அல்லது உண்மையை மறைப்பது, மறுப்பது, ஒழிப்பது, தடுப்பது யோகமாகுமா? ஆயினும் ஒரு ஆசிரியர் தம் பெரும் தத்துவ விளக்கத்தை எழுதிக் கொண்டிருக்கையில், சிறு குழந்தையொன்று தவழ்ந்து தன்னிடம் வந்ததும், அவர் தன் எழுதுகோலை மறைத்தார், கொடுக்க மறுத்தார் என்றால் அது எதனால்? அதன் காரணம் என்ன?

   குழந்தை தன்னைபோல மேதையாகிவிடும் என்ற பொறாமையா? குழந்தையின் மேனியின் நிறத்தால் உண்டான வெறுப்பா? குழந்தையின் சாயல் தனது எதிரியினது போன்ற பிரேமையா? குழந்தை பிறந்த நாடு, இடம், காலம் தெரியாததனாலா? அல்லது குழந்தையின் ஊழ்வினை அப்படியானதாலா?
2. தான் செய்யும் சில நல்ல காரியங்கள் தனக்கு மட்டும் தெரிந்து, பிறரால் பார்த்து அறிய முடியாதவற்றை இரகசியம் என்போம். உதாரணமாக ஒருவர் தியானத்தில் இருக்கும் பொழுது அவர் எப்பொருளில், எத்தெய்வத்தில், எந்தச் சக்கரத்தில் தியானிக்கிறார் என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த இரகசியமாகும்.
3. யோகக் கலை என்றால் என்ன? அதனால் வரும் பலா பலன்கள் என்ன? அதைப் பற்றிய அறிவு நூல்கள் எவ்வளவு உண்டு? அதை ஆர்வத்துடன் பயில்வோர் நம்மில் எத்தனைபேர் உண்டு? உலகம் பூராவும் இக்கலை பரகசியமாகி, எப்படிப் பரவுகின்றது? இவற்றையெல்லாம் அறிந்திருந்தும் நம்மில் சிலர் யோகம் சிறிதளவேனும் செய்யாதிருப்பதின் இரகசியம் எதுவோ? மேற் கூறிய மூன்று பகுதிகளிலும் எது இரகசியம்? எது பேரிரகசியம்? எது பரம இரகசியம்???

வி.தி

# அங்கத்தவராகச் சேருங்கள்.......

அம்மையின் அடியார்களே!

பிரிட்டிஸ் கொலம்பியா வாழ் தமிழ் இந்துக்களுக்கென ஒரு ஆலயம் அமைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில், அருள்மிகு துர்க்காதேவி ஆலயத்தை ஆரம்பத்தில் நிறுவியவர்களுக்கும் - எங்களுக் கெல்லாம் அம்மையின் அருளைப் பொழிய -இந்த ஆலயத்தை மக்கள் ஆலயமாக மாற்றி, கடந்த மூன்று மாதங்களாக ஆலயத்தை முன்னேற்றப்பாதையில் வழிநடாத்திச்செல்லும் எல்லாத் தொண்டர்களுக்கும் அடியார்களுக்கும், ஒரு இந்து என்ற முறையில் எனது உளம் கலந்த நன்றிகள்.

**நாங்கள் பிறந்த மண்ணில், நாங்கள்பிறக்கும் முன்பே, எமக்காக ஆலயங்கள், எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்டு- அவைகள் சிறப்பாக இயங்க நிரந்தர வருமானங்கள் தரும் சொத்துக்களும் சேர்க்கப்பட்டும் இருந்தன. இதனால் ஆலயங்களை நிர்வகிப்பதில் எமக்கு பெரிதாக எந்தவிதப் பிரச்சனைகளும் ஏற்பட்டது இல்லை.**

ஆனால் நாங்கள் குடியேறிய நாடுகளின் நிலமை வேறு. இங்கு நாங்கள்தான் ஆலயங்களை நிர்மாணிக்க வேண்டும். நாங்கள்தான் ஆலயங்களை நிர்வாகிக்கவும் வேண்டும். இந்த இரண்டு செலவீனங்களையும் - நாள்தோறும் அடியார்கள் தரும் நன்கொடைகள் மூலம் சமாளிக்க முடியாது என்பது உங்களுக்கும் தெரிந்ததே. ஆகவேதான் ஆலயத்தின் கட்டிட வளர்ச்சிக்காகக் கட்டிட நிதி ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை, ஆலய நிர்வாகச் செலவிற்கு உங்களின் சிறிய பங்களிப்பை பெறும் நோக்குடன், அங்கத்துவ முறையும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நற்பணியில் - இப்போது 81 குடும்பங்கள் - மிகவும் ஆர்வமுடன் அங்கத்தவர்களாக இணைந்தும் உள்ளார்கள்.

அன்பான அடியார்களே- இன்னும் நீங்கள் அங்கத்தவராகச் சேரவில்லையா? அப்படியானால், மேலும் தாமதிக்காதீர்கள் - இன்றே அங்கத்தவராகச் சேருங்கள். தினசரி 50 சதமாகச் சேர்த்து மாதம் 15 டொலர்களைச் செலுத்துவதன் மூலம் - அம்மையின் ஆலயத்தின் நிர்வாகச்செலவில் நீங்களும் ஒரு பக்களிப்பை அளிக்கின்றீர்கள். அதுமட்டுமன்றி - தொண்டர்களினால் நடாத்தப்படும் இவ்வாலயச் செயற்பாடுகளில் நீங்களும் , ஒரு தொண்டராக இணைந்தும் கொள்ளுகிறீர்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக, இவ்வாலயம் மேன் மேலும் நல்லசெயற்பாடுகளைச் செய்வதற்கு - மானசீகமான அங்கீரத்தையும் அளிக்கின்றீர்கள்.

உதாரணமாக, எமது சிறார்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள இந்து சமயம் பற்றி தெளிவான அறிவைப் புகட்டி இருக்கின்றோமா? இல்லை என்றே கூறவேண்டும். நாங்கள் பிறந்தநாட்டில் இந்துக்களுக்குச் சமயபாடம் ஒரு கட்டாய பாடம். வாழ்ந்த சூழலும் இந்து சமயச் சூழல். இந்த நிலை இங்கு இல்லை. பலவிதமான கலாச்சாரங்களுக்கு மத்தியில் எமது பிள்ளைகள்

வாழ்கிறார்கள். தாங்கள் பின்பற்றும் இந்து மதத்தைப் பற்றி மற்ற இனத்தவர்கள் கேக்கும் கேள்விக்ளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தடுமாறுகிறார்கள். வருங்காலத்தில் எமது இந்து சமயத்தையும், இந்துக் கலாசாரத்தையும் பாதுகாப்பது இவர்கள் கையிற்தான் தங்கியுள்ளது என்பதையும் நாங்கள் மறந்துவிடக்கூடாது.

"இந்த இளம் சந்ததியினரை நாங்கள் தயார் செய்யவேண்டும். அவர்களுக்குச் சமய அறிவைப் புகட்ட சமய வகுப்புக்கள் வாரம் ஒரு முறையாவது நடாத்த வேண்டும் -அவர்களை ஆலயத் தொண்டில் ஈடு படுத்த வேண்டும்" என்றெல்லாம் உங்களில் எத்தனை பேர் எண்ணி இருப்பீர்கள். அந்த நல்ல எண்ணம் - அந்த நினைப்பு அடுத்த கணமே மடிந்தும் போயிருக்கும். இந்த நிலை எனிமேலும் தொடர வேண்டாம். உங்கள் மனங்களில் துளிர்விடும் நல்ல எண்ணங்களை நாங்கள் எல்லோரும் சேர்ந்து செயற்படுத்துவோம். எமது இளம் சிறார்களின் எதிர்காலத்தை மனதிற் கொண்டு கருமமாற்றுவோம்.

அன்பான அடியார்களே - பிரிட்டிஸ் கொலம்பியாவில் 6000 தமிழ் மக்கள் வாழ்வதாகக் கூறுகிறார்கள். அது உண்மையானால் - இதில் கணிசமான மக்கள் இந்துக்களாக இருபீர்களே! நீங்கள் எல்லாம் ஏன் என்னும் ஒதுங்கி வாழவேண்டும் அருள்மிகு துர்க்க தேவி ஆலயம் உங்கள் ஆலயம். திரண்டு வாருங்கள். அம்மையின் வழிபாட்டில் , ஆலயத் தொண்டில் நீங்களும் பங்குபற்றுங்கள்.நீங்கள் விரும்பினால் அங்கத்தவராகச் சேருங்கள். நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு, இந்த ஆலயத்தை ஒரு புனிதத் தலமாக மாற்றுவோம். எமது சிறார்களுக்கு சமய அறிவையும், எமது பண்பாடுகளையும் புகட்டும் ஒரு இந்துக் கல்லூரியாகவும் மாற்றுவோம்.

*"அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்*
*நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே*
*அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே*
*அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே"*

நன்றி வணக்கம்.

அன்புடன்
கதிர்

## உள்ளக வலை (Inter Net)

- நவீன யுகத்தில் internet என்று அழைக்கப்படும் உள்ளக வலையின் சேவை அளப்பரியது.

- சமயம், கல்வி, தமிழ்மொழி, வேலைவாய்ப்பு போன்றவற்றை விரிவாகத் தரும் உள்ளக வலை விலாசங்கள் இந்த மஞ்சரியில் காலத்திற்குக் காலம் பிரசுரமாகும்.
- அடியார்களும் மற்றவர்களுக்குப் பயன் தரும் உள்ளக வலை விலாசங்களை எமக்கு எழுதி அனுப்பினால் இந்தப் பகுதியில் பிரசுரிப்போம்.
- தங்கள் வீட்டில் உள்ளக வலை(internet) வசதி இல்லாதவர்கள் நூல்நிலயங்களில் உள்ள, உள்ளக வலைகளைப் பாவிக்கலாம். இது இலவசமான சேவையாகும்.

வேலை வாய்ப்பிற்கு....
www.canadajobs.com
www.britishcolumbiajobs.com

கல்வி சம்பந்தமான விபரங்களுக்கு......
http://www.careerclick.com/bc
http://www.workinfonet.bc.ca
http://www.careerpathsonline.bc.ca
Ministry of Education
http://www.BCED.GOV.BC.CA
CAPILANO COLLEGE
http://WWW.capcollege.bc.ca

இந்து சமயம் பற்றிய விரங்களுக்கு....

http://www.hindu.org
http://www.hindunet.org/home.html
http://www.mandirnet.org/temple_news.html
http://www.ssvt.org
http://www.vivekananda.org
http://www.gov.sg/heb/hindu-tamil.html
http://www.carnaticmusic.com/main.asp
http://www.asroadvice.com
http://air.kode.net

---

- வெகுவிரைவில் சமய பாடவகுப்புக்கள் ஆலயத்தில் ஆரம்பமாக உள்ளது. இது சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

---